**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை - 2023**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான அவதானிப்புக்கள்**

**1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் கொள்கை பெறுமானத்தேய்வு விகிதத்திற்கு வெளியேயான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு காரணமாக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு ரூபா 3,619,046 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, பெறுமானத்தேய்வு கணிப்பீட்டில் பயன்தரு ஆயுட்காலத்திற்கு பதிலாக முன்னைய பெறுமானத்தேய்வு விகிதங்களைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட பிழை சீர்செய்யப்பட்டு, | அதிகாரசபையின் கொள்கை பெறுமானத்தேய்வு விகிதத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்காலத்தில் பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும். | வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டில் நிலையான வைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 18,000,000 மீளாய்வாண்டின் முதலீடுகளாக இருந்ததால் முதலீட்டு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இந்த நிலையான வைப்புக்கான காசோலை 2023 திசெம்பர் 29 இல் வழங்கப்பட்டதால், அது அந்த திகதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட வங்கி 2024 சனவரி 04 இல் காசோலையை தீர்வு செய்திருந்ததால் தீர்வு திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்த தீர்வுக் காலப்பகுதியை போக்குவரத்திலுள்ள பணமாக மீண்டும் பதிவு செய்வதன் மூலம் முதலீட்டுக் கணக்கு சீர்செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிலையான வைப்பு மீதிகள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 86,261,778 ஆக இருந்த போதிலும் அது ரூபா 78,064,586 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டு ரூபா 8,197,192 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், பணிக்கொடை நிதி முதலீட்டு வருமானம் ரூபா 9,735,679 ஆக இருந்த போதிலும் ரூபா 14,496,105 ஆக ரூபா 4,760,426 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 8,197,192 நிலையான வைப்பு வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட தவறு சீர்செய்யப்பட்டு, கணக்குகளின் தொடர்புடைய ஒப்பீட்டு கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.<br><br>ரூபா 4,760,426 பணிக்கொடை நிதி முதலீட்டு வருமானத்தை கணக்கீடு செய்ததில் ஏற்பட்ட தவறை சீர்செய்து உரிய சீராக்கங்களை மேற்கொண்டு கணக்குகளின் ஒப்பீட்டு கூற்றுக்களை தயாரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | வருமானத்தை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஊழியர்களின் சேவைக் காலம் ஒரு முழு ஆண்டிற்கு நிறைவடையாத போது ஒரு முழு ஆண்டுக்கான பணிக்கொடையின் கணிப்பீடு காரணமாக, முன்னைய ஆண்டின் பணிக்கொடை ஏற்பாட்டை அதிகரித்துக் காட்டியமை தொடர்பாக மீளாய்வாண்டில் சீராக்கம் செய்யப்படாததால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 8,930,758 ஆக அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது, மேலும் அந்த ஆண்டிற்கான பணிக்கொடை பற்றாக்குறை ஒதுக்கீடு ரூபா 1,784,559 ஆல் அதிகரித்துக் | பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பிடும் போது ஊழியர்களின் சேவைக் காலப்பகுதியை அருகிலுள்ள மாதத்திற்கு சீர்செய்ததால் இந்த பிழை ஏற்பட்டுள்ளது. ஒப்பீட்டு நிதிக்கூற்றுக்களில் சரியான கணிப்பீட்டை வழங்குவதற்கு அறிவுறுத்தப்படுகிறது. | பணிக்கொடை ஏற்பாடு ஊழியர் சேவையில் இருந்த காலப்பகுதிக்கு மாத்திரமே கணிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் முன்னைய ஆண்டின் கணக்கீட்டு பிழைகளுக்காக மீளாய்வாண்டில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

காட்டப்பட்டிருந்ததுடன் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 7,146,199 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 52,338,000 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 91,246,000 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 38,908,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த செலவினம் ரூபா 137,090,000 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் திருத்தமானது 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு சில வருடங்களில், சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சட்டத்தின் 30 பிரிவுகளை சமர்ப்பிப்பதைத் தவிர, மீளாய்வாண்டு அளவில் 19 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சட்டத்தின் திருத்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஏற்கனவே இந்த சட்டமூலத்தை ஆராய்ந்து 2024.04.05 இல் அமைச்சின் செயலாளருக்கு ஆய்வறிக்கையை அனுப்பி வைத்திருந்ததுடன் வியாபாரம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு மேலதிக நடவடிக்கைக்காக 2024.04.10 இல் அதிகாரசபைக்கு ஆய்வறிக்கையை அனுப்பியிருந்தது. அதன் பிரகாரம் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அதிகாரசபை அனுப்பவுள்ளது. | சட்டத்தின் திருத்தத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 சனவரி 24 இல் சுவிற்சர்லாந்தில் உள்ள ஒரு கம்பனியுடன், பாதுகாப்பற்ற மற்றும் தரக்குறைவான தயாரிப்புக்களிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு அடையாளம் காணப்பட்ட பல தயாரிப்புகளுக்கான பாதுகாப்பு முறைமையை தயாரிப்பதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டது. அது தொடர்பாக வெளியிடப்பட்ட உத்தரவு இல. 49 ஐ இரத்து செய்வதற்கு அதிகாரசபைக்கு எதிராக பல தயாரிப்பு உற்பத்தி கம்பனிகள் தாக்கல் செய்திருந்த விண்ணப்பத்திற்காக உயர் | இந்த பிணக்குத்தீர்த்தல் வழக்கின் தீர்ப்பு 2022.05.10 இல் வழங்கப்பட்டதுடன், குறித்த தீர்ப்பின் பிரகாரம், ஒப்பந்தத்தை மீறியதற்காக ரூபா 2.176 பில்லியனை அதிகாரசபைக்கு செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குறித்த மானியத்திற்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில், அதிகாரசபையானது சீஎச்சீ 626/2023 என்ற வழக்கை 2022 யூலை 07 இல் தாக்கல் செய்துள்ளது. தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மனுதாரர் கம்பனி சீஎச்சீ | அமலாக்கல்தன்மையை நிறுவிய பின்னர் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும், பொறுப்பான தரப்பினரை உடனடியாக அடையாளம் காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், சுவிஸ் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்துடன் அதைத் தொடர முடியாமல் இருந்தது.

உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்படாததால், அந்த உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக இரத்து செய்து உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2.716 பில்லியன் முழு முதலீட்டுத் தொகையை செலுத்துமாறு கோரி 2018 ஆம் ஆண்டில் சர்வதேச பிணக்குத்தீர்த்தல் நீதிமன்றத்தில் கம்பனி அதிகாரசபைக்கு எதிராக வழக்கொன்றை தொடர்ந்திருந்தது. 2022 மே 10 இல் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம், அதிகாரசபை கம்பனிக்கு வழங்கிய பிணக்குத்தீர்த்தல் வழக்கிற்கான இறுதித் தீர்ப்பு ரூபா 2.716 பில்லியனாக இருந்ததுடன் தீர்வுக் கட்டணமாக ரூபா 325,000 செலுத்தப்பட வேண்டியிருந்தது. 2022 யூலை 7 இல் பிணக்குத்தீர்த்தல் வழக்கின் இறுதித் தீர்ப்பிற்கு எதிராக அதிகாரசபை கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்ததுடன், அதிகாரசபையானது உள்ளக விசாரணையை நடாத்தியிருக்காததுடன் இது தொடர்பில் பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டிருக்கவில்லை.

569/2023 ஐ 2023 மே 16 இல் கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது. தற்போது இந்த உடன்படிக்கையை அமுல்ப்படுத்துவதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதை பரிசீலிப்பதற்கு அதிகாரசபையினால் விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களதிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தங்களின் நோக்கெல்லையுடன் தொடர்புடையது அல்ல என்றும் அவர்களே இந்த விடயத்தை இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனரென எமக்கு அறிவித்துள்ளதெனவும் குறித்த முகவர் தெரிவித்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அதிகாரசபையானது 2015 இல் 1977 ஊடாடும் கைத்தொலைபேசி சேவை (1977 Interactive Mobile Service) மென்பொருளுக்காக ரூபா 5,401,428 தொகையையும் இந்த | அமைச்சுக்களின் நோக்கெல்லைகள் பல சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்ததுடன் இதனால் அடிப்படை நோக்கங்களில் சில நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிறுவனங்களுக்கு | செயற்திட்டத்தில் இருந்து குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தை பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்துவதற்காக ரூபா 6,117,480 தொகையையும் செலவிட்டிருந்தது. எனினும், தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் புதுப்பிக்கப்படாத பொருட்களின் விலைகள் போன்ற பலவீனங்கள் காரணமாக செயற்திட்டம் எதிர்பார்த்த அதன் இலக்குகளை அடைந்திருக்கவில்லை. | இடையேயான தொடர்பாடல் இடையூறாக மாறியது. தற்போது, 1977 என்ற தொலைபேசி எண்ணில் பெறப்படும் முறைப்பாடுகளை மாவட்டங்களுக்கு அனுப்பி, வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கும் முன்னோடி செயற்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.<br><br>2024 மே 7 இல் நடைபெற்ற கோப் (COPE) குழுவில், அப்போதைய பதில் தலைவர், அந்த பலவீனங்களைக் குறைப்பதற்கும், இன்னும் சிறப்பாகச் செய்ய முடியாத பணிகளைச் செய்வதற்கும் ஒரு புதிய MIS முறைமையை நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறேன் என்று தெரிவித்தார். | |
| (ஈ) | 2018 செப்தெம்பர் 14 இல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகம் நியாயமான காரணங்களைக் குறிப்பிடாமல் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்ததன் காரணமாக, அந்த உத்தியோகத்தர் 2020 பெப்ரவரி 14 இல் மேற்குறிப்பிட்ட சேவையை நிறுத்துவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார். மேலும் இறுதி தீர்ப்பின் பிரகாரம் அதிகாரசபை உத்தியோகத்தரிற்கு சம்பளம் மற்றும் படி நிலுவைகள் உட்பட ரூபா 1,990,891 தொகை வழங்க வேண்டியிருந்தது. | உத்தியோகத்தரை பணிநீக்கம் செய்ததில் முறையான நடைமுறை இல்லாததால், அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நிலுவையாக உள்ள ஊதியத்தை வழங்குவதற்கு அதிகாரசபைக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகாரசபை அந்த உத்தியோகத்தரிற்கு நிலுவை கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. | முடிவெடுப்பதில் முறையாகவும் திறமையாகவும் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு வர்த்தகரும் அமைச்சரால் தீர்மானிக்கப்படும் ஒரு | ஒவ்வொரு வர்த்தகரையும் அதிகாரசபையில் பதிவு செய்வதற்கான தரவு முறைமையொன்றை உருவாக்குவதற்கான பெறுகை செயன்முறையின் அடிப்படை படிமுறைகள் ஏற்கனவே | திட்டமிடப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலட்சம் ரூபாவை விஞ்சாத வருடாந்தக் கட்டணத்தினை கொடுப்பனவு செய்தமை தொடர்பாக அதிகாரசபையில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை வர்த்தகர்களை பதிவு செய்திருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வர்த்தக அமைச்சரால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதிகாரசபையினால் வரையப்பட்ட முன்மொழிவு, குறித்த குழுவினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, தேவையான மேம்பாடுகள் மேற்கொள்ளப்படும். போட்டித்திறன் ஊக்குவிப்புப் பிரிவு ஜா-எல பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனங்களைப் பதிவு செய்து அதனது முன்னோடி செயற்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், ஒரு வர்த்தகர் தனது வணிக இடத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலோ வர்த்தகரின் இயல்பான வர்த்தகத் தேவைக்கு அதிகமாக எந்தப் பொருளையும் வைத்திருக்கக் கூடாத போதிலும் சந்தையில் கீரி சம்பா அரிசி, முட்டை, எரிவாயு, பால் மா, வெங்காயம், உரங்கள் போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் அதிகாரசபையால் மீளாய்வாண்டில் சோதனைகள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன, மொத்தம் 450 புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டும் ஆனால் தற்போது செயலில் உள்ள புலனாய்வு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 282 ஆகும். சோதனை பணிகளுக்கு மேலதிகமாக விலைவாசி கணக்கெடுப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நுகர்வோர் முறைப்பாட்டு விசாரணைகள் மற்றும் நீதித்துறை கடமைகள் ஆகியவற்றில் உத்தியோகத்தர்கள் பங்கேற்க வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில், சட்டத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய சோதனைகளை மேற்கொள்வது நடைமுறையில் கடினமானதாக உள்ளதுடன் அந்த பலவீனங்கள் கண்டறியப்பட்டு, 2024 ஆம் ஆண்டு முதலான சோதனைகளில் சோதனை பிரிவுகளின் அடிப்படையில் கடமை இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எனினும், அதிகாரசபை ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிகழும் தற்போதைய வாடிக்கையாளர் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை | சட்டத்தின் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் சோதனைகளை திட்டமிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அளித்து, சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் சோதனை இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டும் என பணிப்புரைகளை வழங்கியுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் உள்ளுர் கீரி சம்பா அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்ட போது சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. எனினும் கீரி சம்பா அரிசி மீது 596 சோதனைகள் நடாத்தப்பட்டன, இது மீளாய்வாண்டில் அதிகாரசபையால் நடாத்தப்பட்ட 24,848 சோதனைகளின் மொத்த எண்ணிக்கையில் 2 சதவீதம் மாத்திரமே ஆகும். | நுகர்வோர் முறைப்பாடுகள் மற்றும் சந்தை சோதனைகள் மூலம் 596 அரிசி (கீரி சம்பா) சோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக மாவட்ட அளவில் கீரி சம்பா அரிசி களஞ்சிய பரீட்சிப்பும் நடாத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அதிகாரசபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாத பின்னணியில் மட்டுப்படுத்தும் காரணிகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், எதிர்கால விசாரணைத் திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் இந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இலக்கு சோதனைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு திட்டமிட்டு சோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் உள்நாட்டு எரிவாயு தொடர்பாக 32 சோதனைகள் நடாத்தப்பட்டிருந்தன, அவை அவ்வப்போது விலை திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டதுடன் சந்தையில் பற்றாக்குறைகள் பதிவாகியுள்ளன, மேலும் இது மீளாய்வாண்டில் அதிகாரசபையால் நடாத்தப்பட்ட 24,848 ஆக இருந்த மொத்த சோதனைகளின் எண்ணிக்கையில் 1 சதவீதம் மாத்திரமே ஆகும். | நிறுவனக் கட்டுப்பாடுகளின் கீழ், சந்தையில் நடைமுறை சிக்கல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் அந்த காலப்பகுதியில் பெறப்பட்ட எரிவாயு தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் சோதனைகள் நடாத்தப்பட்டன. | காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு சோதனைகள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ஈ) | சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் விபரக்குறிப்புக்கள் பின்பற்றப்படுகிறதா என்பதைச் சரிபார்ப்பதற்கு முறைப்பாடுகள் மற்றும் சரியான நேரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டால், மாதிரி பரீட்சிப்புக்களை அதிகாரசபை மேற்கொள்ளும். எனினும், மீளாய்வாண்டில் தரநிலைகள் கட்டாயப்படுத்தப்பட்ட 34 வகைப் | சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம், சந்தையில் சிக்கல் நிலைமைகளை எதிர்கொண்ட நுகர்வோர் பொருட்களுக்கு மாதிரி சோதனையில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதன் பிரகாரம், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கு மாதிரி சோதனை அடைந்துகொள்ளப்பட்டுள்ளதுடன் பாதீட்டு ஒதுக்கீட்டு வரம்புகளின் | பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் தொடர்பான உரிய சோதனைகளை போதுமான அளவில் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் வகைகளை உள்ளடக்கிய 29 வகைப் பொருட்களில் 133 மாதிரிகள் மாத்திரமே சோதிக்கப்பட்டன. அதன் பிரகாரம், பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் தொடர்பாக உரிய பரீட்சிப்புக்களை போதுமான அளவில் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை. | கீழ் வெளி ஆய்வுகூடங்கள் மூலமான இந்த சோதனைகளின் செயலாற்றல் காரணமாக சில வரம்புகள் உள்ளன. | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2023 சனவரி முதல் மே வரையிலான 05 மாத காலப்பகுதியின் போது, முட்டைகளுக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்ட போது முட்டை தொடர்பாக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 1179 ஆகும். அதன் பிரகாரம் ஒரு மாதத்தில் நடாத்தப்பட்ட சராசரி சோதனைகளின் எண்ணிக்கை 236 ஆக இருந்தது. எனினும், 277 புலனாய்வு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியதன் காரணமாக, ஒரு மாதத்தில் ஒரு விசாரணை உத்தியோகத்தர் நடாத்திய முட்டை சோதனைகளின் சராசரி எண்ணிக்கை 01 ஆகக் குறைவடைந்துள்ளது. | நிறுவனக் கட்டுப்பாடுகளின் கீழ் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சந்தையில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் பெறப்பட்ட முட்டைகளின் விலை தொடர்பான முறைப்பாடுகளின் அடிப்படையில் நிறுவன நோக்கங்களை அடைந்துகொள்வதில் செய்யப்பட வேண்டிய பணிகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதன் அடிப்படையிலும் சந்தையில் முட்டை தட்டுப்பாட்டை அவதானித்த போது கண்டறியப்பட்டவையின் அடிப்படையிலும் இந்த எண்ணிக்கையிலான சோதனைகள் நடாத்தப்பட்டன. | காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு போதுமான எண்ணிக்கையில் சோதனைகளை மேற்கொள்ளும் வகையில் சோதனைகள் திட்டமிடப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இடைநிலை முகாமை மட்டத்தில் 15 உதவி பணிப்பாளர் பதவிகளும், கனிஷ்ட முகாமை மட்டத்தில் 08 பதவிகளும், செயற்பாட்டு மட்டத்தில் விசாரணை உத்தியோகத்தரின் 104 பதவிகளும், செலவு/கணக்கு உத்தியோகத்தர்களின் 12 பதவிகளும் வெற்றிடமாக உள்ளன. | அதிகாரசபையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு பொருத்தமான நபர்களை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்து, அதற்கேற்ப முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பிரதமர் அலுவலகத்தின் அங்கீகாரங்களைப் பெற்றதன் பின்னர் நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை ஏற்கனவே அதனால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளது. வெற்றிட பதவிநிலைகளிற்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படும். | அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும், சட்டத்தின் முக்கிய நோக்கங்களை செயற்திறனாக அடைந்துகொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |